013605

<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை - மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்புகள் - 5000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த தொழில் முனைவோருக்கு தொழில் மேலாண்மை பயிற்சிகள் - ரூ.2 கோடி செலவில் வழங்கிட நிருவாக அனுமதி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி)துறை**

அரசாணை (நிலை) எண். 87 நாள்:10.11.2021

பிலவ வருடம், ஐப்பசி 24 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2052

DIRECTORATE OF TRIBAL WELFARE
18 NOV 2021
CHEPAUK, CHENNAI-5

படிக்கப்பட்டது:-

தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின்
கடித எண். ஜி1/1730/2021.

*******

**ஆணை:-**

2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவு கூட்டத்தொடரில் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், ஏனையப் பிற அறிவிப்புகளுடன், கீழ்க்கண்ட அறிவிப்பினையும், வெளியிட்டிருந்தார்கள் :-

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் முனைவு ஏற்படுத்தி தரும் வகையில் கடன் பெற 5000 தொழில் முனைவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களுக்கு மாவட்ட அளவில் 7 நாள் தொழில் மேலாண்மைப் பயிற்சிகள் தகுதியான நிறுவனங்கள் மூலம் ரூ.2 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட, தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான பொருளாதார

மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 4500 பேர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த 500 பேர் உள்ளிட்ட, 5000 தொழில் முனைவோரை, தேர்வு செய்து, அவர்கள் தொழில் தொடங்கிட ஏதுவாக, மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படும் NEEDS, UYEGP மற்றும் PMEGP திட்ட வழிகாட்டுதலின் அடிப்படையில் பின்பற்றப்படும் நடைமுறைகளைப் போலவே தாட்கோ மூலம், Entrepreneurship Development Institute (EDI) நிறுவனத்தின் வாயிலாக, மாவட்ட அளவில் 7 நாட்கள் தொழில் மேலாண்மை பயிற்சிகள் வழங்கலாம் என்றும், பயிற்சி அளிக்கும் நிறுவனத்திற்கு ரூ.3400/-ம், தொழில் பயிற்சி பெறுபவருக்கு உதவித் தொகையாக ரூ.600/- ம், ஆக மொத்தம் ரூ.4000/- வீதம், 5000 பயனாளிகளுக்கு ரூ.2.00 கோடி, செலவினத்தில் பயிற்சிகள் வழங்கிடலாம் என்றும், ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 4500, பயனாளிகளுக்கான 1.80 கோடி செலவினத்தை, PMAJAY - (SCA - SCSP) ஒன்றிய நிதி திட்டத்தில் இருந்தும், 500 பழங்குடியின பயனாளிகளுக்கான செலவினத்தை மாநில நிதியிலிருந்தும் மேற்கொள்ளலாம் என தெரிவித்து, இது குறித்து ஆணைப் பிறப்பிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான, தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில், தாட்கோ, மேலாண்மை இயக்குநரின், கருத்துருவினை ஏற்று ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 4500 தொழில் முனைவோர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த 500 தொழில் முனைவோர் உள்ளிட்ட, 5000 தொழில் முனைவோரை தெரிவு செய்து, ஒரு தொழில் முனைவோருக்கு, ரூ.4000/- வீதம் (பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.3400/- மற்றும் தொழில் முனைவோருக்கு உதவித்தொகை ரூ. 500/-), 5000 தொழில் முனைவோருக்கு, ரூ.2.00 கோடி செலவினத்தில், மாவட்ட அளவில் தாட்கோ மூலம் , தொழில் மேலாண்மை பயிற்சி அளிக்க நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது .

4. மேலே பத்தி -3 இல் நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 2 கோடி தொகையில், ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 4500 தொழில் முனைவோருக்கான ரூ.1.80 கோடி செலவினத்தை, மத்திய அரசின், PM-AJAY (SCA to SCSP ) திட்ட நிதியிலிருந்து விடுவித்திடவும், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த 500 தொழில் முனைவோருக்கான ரூ.20 இலட்சம், செலவினத்தை, மாநில நிதியிலிருந்தும் விடுவித்திடும் வகையில், உரிய கருத்துருவினை, பயனாளிகளை தெரிவு செய்த

பின்னர் அரசுக்கு அனுப்புமாறு, ஆதி திராவிடர் நல ஆணையர் / பழங்குடியினர் நல இயக்குநர் / தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு எண். 43703 நிதி (ஆதி(ம)பந) /2021-1 நாள் 20.10.2021 இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. மணிவாசகன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், ஆதி திராவிடர் நலம், சென்னை-5
மேலாண்மை, இயக்குநர், தாட்கோ, சென்னை -18,
இயக்குநர் பழங்குடியினர் நலம், சென்னை- 5
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
அனைத்து மாவட்ட மேலாளார், தாட்கோ.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 18/35
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை
மாவட்ட திட்ட அலுவலர், (பழங்குடியினர் நலம்)
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9

நகல்:-

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9
நிதி (ஆதி (ம)பந) த்துறை, சென்னை -9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு -1 / ஆதிந -5 / ப.மே 1) த் துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சிவசக்தி 16/11/2021
பிரிவு அலுவலர்
16/11/2021